# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2018 ஒகஸ்ட்

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2018 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் **நகர எண்ணையும் பாட எண்ணையும்** குறிப்பிடும்போது சரியான எண்ணைக் குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஆகக் கூடுதலாக பிரதான பாடங்கள் 03க்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படும்.

02. **விண்ணப்பப்படிவம்**

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தையே பயன்படுத்த வேண்டும்.

**பாடசாலையில் இருந்து பாடசாலை விடுகைப்பத்திரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றினார் என அறியப்படுமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

2.1(அ) **(13) பொது ஆங்கிலம்**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கும் மேலதிகமாகப் பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். **இவற்றுக்கான தரங்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது.** இப்பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த.(உயர்.தர) பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பாடத்தை ஒரு பாடமாக மட்டும் தோற்றுவதற்கும் இடமளிக்கப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெறும் எண்ணத்துடன் இருப்பாராயின் அவர் இப்பாடத்தில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.

(இ) பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

2.2 விண்ணப்பதாரிகள் இவ்வறிவுறுத்தலில் காட்டப்பட்டுள்ள DP/AL/2018/5 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 28 செ.மீ X 21 செ.மீ அளவிலான வெள்ளைத்தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும். 01 முதல் 11 வரையான விபரங்கள் தாளின் முதல் பக்கத்திலும் 12 முதல் 14 வரையான விபரங்கள் அதே தாளின் மறு பக்கத்திலும் அமையுமாறு ஒரு தாளிலேயே காட்டப்பட வேண்டும். **விண்ணப்பப்படிவம் 2018.02.23ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

2.3 இறுதித் திகதிக்கு முன் பற்றுச்சீட்டைப் பெற்றிருப்பினும் இறுதித் தினத்திற்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

2.4 **ஒரு விண்ணப்பதாரிக்காக ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பினால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

03. ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் இட்டு அனுப்ப வேண்டும். **அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2018 - ஒகஸ்ட் நகர எண் மற்றும் நகரம் ..........."** இக்கோட்டில் தெரிவு செய்த நகர எண்ணையும் நகரத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

04. வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அச்சிடப்பட்டுள்ள படிவங்களை இதற்காகப் பயன்படுத்துவதாயின் இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள பாட இலக்கங்கள், நகர இலக்கங்களுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள ஏனைய சகல விபரங்களும் ஒத்ததாக இருத்தல் அவசியம். அத்துடன் பிற நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் உள்ள பாட இலக்கங்கள், நகர இலக்கங்கள் என்பவற்றிலுள்ள தவறான தகவல்களுக்கான பொறுப்பை இத்திணைக்களம் ஏற்காது என்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வமான இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு ஏற்ப இங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பரீட்சைக்கு விண்ணப்பிப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

05. இப் பரீட்சை ஒழுங்கமைப்பைச் செய்யும் பொருட்டு கணனி இயந்திரத்தை உபயோகப்படுத்துவதால் நீங்கள் தெரிவு செய்யும் பாடத்தின் **பாட எண்ணும்** தெரிவு செய்யும் **நகரமும் நகர எண்ணும்** மிக முக்கியமானது. ஆதலால் **விண்ணப்பப்படிவத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னர் மிகவும் கவனமாக மீண்டும் ஒரு முறை வாசித்து அவற்றில் எழுதப்பட்டுள்ள இலக்கங்களையும் மற்றும் விவரங்களையும் சரி பார்ப்பதுடன், இன்னொருவரைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்தல் மிக முக்கியமானதாகும்.**

**எக்காரணத்துக்காகவேனும் பரீட்சை நிலையமோ, விண்ணப்பித்த பாடமோ, மொழி மூலமோ பின்னர் மாற்றப்படமாட்டாது என்பதால் உமது விண்ணப்பப்படிவத்தை எப்பிழையுமின்றி பூரணப்படுத்த வேண்டும்.**

06 உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் தொடர்பாக ஏதாவது அறிந்து கொள்ள வேண்டுமாயின் உங்களின் அனுமதி அட்டை கிடைத்தவுடனே அவ் அனுமதி அட்டையை எடுத்துக் கொண்டு பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு சமூகமளித்தல் வேண்டும்.

07. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பியவுடன், தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

08. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

09. இப் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள **விசேட தேவையுடைய பரீட்சார்த்திகள்** இருப்பின் இப்பத்திரிகையிலுள்ள விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் என்ற தலைப்பின் கீழுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திலுள்ள அறிவுறுத்தலுக்கிணங்க தயாரித்து அனுப்ப வேண்டும்.

**குறிப்பு:** செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திரத்திற்கும் தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டும், பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது. அப்பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றாமையை உறுதிப்படுத்துவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படமாட்டாது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும்.

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

தொடர்பு எண் : 6/3/AL/2018
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
த.பெ.1503, கொழும்பு.
2018.02.01

# க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை - 2018
# பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்

**கொழும்பு மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொட்டாஞ்சேனை | 01 |
| மருதானை | 02 |
| பொரளை | 03 |
| மாளிகாவத்தை | 04 |
| கொலன்னாவ | 05 |
| கறுவாத்தோட்டம் | 06 |
| பம்பலப்பிட்டி | 07 |
| ஹவ்லொக் டவுன் | 08 |
| நுகேகொடை | 09 |
| கோட்டே | 10 |
| பத்தரமுல்ல | 11 |
| மொறட்டுவ | 12 |
| பிலியந்தலை | 13 |
| ஹோமாகம | 14 |
| மஹரகம | 15 |
| ஹங்வெல்ல | 16 |
| அவிசாவலை | 17 |

**கம்பஹா மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நீர்கொழும்பு | 26 |
| சீதுவை | 27 |
| கொச்சிக்கடை | 28 |
| மினுவங்கொடை | 29 |
| திவுலப்பிட்டிய | 30 |
| வெயங்கொடை | 31 |
| மீரிகம | 32 |
| கம்பஹா | 33 |
| கணேமுல்ல | 34 |
| நிட்டம்புவ | 35 |
| ஜா-எல | 36 |
| வத்தளை | 37 |
| ராகம | 38 |
| களனி | 39 |
| மஹர | 40 |
| தொம்பே | 41 |
| கிரிந்திவெல | 42 |

**களுத்துறை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹொரணை | 51 |
| புளத்சிங்கள | 52 |
| பாணந்துறை | 53 |
| பண்டாரகமை | 54 |
| களுத்துறை | 55 |
| பேருவளை | 56 |
| மத்துகம | 57 |
| அகலவத்தை | 58 |
| கம்புறாவெல | 59 |
| அளுத்கம | 60 |

**மாத்தளை மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 71 |
| கலேவெல | 72 |
| நாஉல | 73 |
| லக்கல-பள்ளேகம | 74 |
| தம்புள்ள | 75 |

**கண்டி மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 81 |
| கடுகண்ணாவ | 82 |
| தெல்தோட்டை | 83 |
| தலாத்துஓய | 84 |
| பிலிமதலாவ | 85 |
| கட்டுகஸ்தோட்டை | 86 |
| தெல்தெனிய | 87 |
| வத்தேகம | 88 |
| உடுதும்பற | 89 |
| பூஜாபிட்டிய | 90 |
| ஹசலக | 91 |
| நுகவெல | 92 |
| கலகெதர | 93 |
| கம்பளை | 94 |
| நாவலப்பிட்டி | 95 |
| அலவத்துகொட | 96 |
| அக்குறண | 97 |
| பேராதெனிய | 98 |

**நுவரெலியா மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹெதுனுவெவ | 101 |
| நுவரெலியா | 102 |
| வதுமுல்ல | 103 |
| ஹற்றன் | 104 |
| கினிகத்ஹேன | 105 |
| ஹங்குரன்கெத்த | 106 |

**காலி மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பலாங்கொடை | 111 |
| பலப்பிட்டிய | 112 |
| கறந்தெனிய | 113 |
| காலி | 114 |
| ஹபறாதுவ | 115 |
| தவளம | 116 |
| பத்தேகம | 117 |
| எல்பிட்டிய | 118 |
| நாகொட | 119 |
| பெந்தோட்ட | 120 |
| ஹிந்தோட்டை | 121 |
| அஹங்கம | 122 |
| உணவடுண | 123 |
| உடுஹம | 124 |

**மாத்தறை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வெலிகம | 125 |
| மாத்தறை | 126 |
| கம்புறுபிட்டிய | 127 |
| ஹக்மன | 128 |
| தெய்யந்தர | 129 |
| தெவிநுவர | 130 |
| திக்வெல்ல | 131 |
| அக்குறஸ்ஸ | 132 |
| கொட்டப்பொல | 133 |
| தெனியாய | 134 |

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பெலிஅத்த | 141 |
| கெற்றமான | 142 |
| வலஸ்முல்ல | 143 |
| கட்டுவன | 144 |
| வீரகெற்றிய | 145 |
| தங்காலை | 146 |
| நாக்குளுகமுவ | 147 |
| அம்பலாந்தோட்டை | 148 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 149 |
| ஹுங்கம | 150 |
| அம்பாந்தோட்டை | 151 |
| திஸ்ஸமகராம | 152 |
| லுணுகம்வெஹர | 153 |
| சூரியவெவ | 154 |

**யாழ்ப்பாண மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| சாவகச்சேரி | 161 |
| யாழ்ப்பாணம் | 162 |
| நெடுந்தீவு | 163 |
| கோப்பாய் | 164 |
| கரவெட்டி | 165 |
| தெல்லிப்பளை | 166 |
| பருத்தித்துறை | 167 |

**கிளிநொச்சி மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 171 |
| பளை | 172 |

**மன்னார் மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 176 |
| முருங்கன் | 177 |
| மடு | 178 |

**முல்லைத்தீவு மாட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| முல்லைத்தீவு | 186 |
| முள்ளியவளை | 187 |
| புதுக்குடியிருப்பு | 188 |
| மல்லாவி | 189 |
| யோகபுரம் | 190 |

**வவுனியா மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 196 |
| ஓமந்தை | 197 |

**திருகோணமலை மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கந்தளாய் | 206 |
| திருகோணமலை | 207 |
| மூதூர் | 208 |
| கிண்ணியா | 209 |
| புல்மோட்டை | 210 |

**மட்டக்களப்பு மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 216 |
| ஏறாவூர் | 217 |
| காத்தான்குடி | 218 |
| வாழைச்சேனை | 219 |
| களுவாஞ்சிக்குடி | 220 |
| செங்கலடி | 221 |
| ஓட்டமாவடி | 222 |

**அம்பாறை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 231 |
| தமன | 232 |
| உஹன | 233 |
| தெஹியத்தகண்டிய | 234 |
| சேரங்கட | 235 |
| பொத்துவில் | 236 |
| கல்முனை | 237 |
| அக்கரைப்பற்று | 238 |
| சம்மாந்துறை | 239 |
| நிந்தவூர் | 240 |
| திருக்கோவில் | 241 |

**புத்தளம் மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வென்னப்புவ | 251 |
| தங்கொட்டுவ | 252 |
| மாதம்பே | 253 |
| சிலாபம் | 254 |
| மாறவில | 255 |
| நாத்தாண்டிய | 256 |
| புத்தளம் | 257 |
| முந்தல் | 258 |
| ஆனைமடு | 259 |
| கற்பிட்டி | 260 |

**குருநாகலை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குளியாப்பிட்டிய | 266 |
| பிங்கிரிய | 267 |
| ஹெற்றிபொல | 268 |
| பன்னல | 269 |
| நாரம்மல | 270 |
| கிரிஉல்ல | 271 |
| பொல்காவலை | 272 |
| குருநாகலை | 273 |
| இப்பாகமுவ | 274 |
| தொடங்கஸ்லந்த | 275 |
| மொறதிஹ | 276 |
| மாவத்தகம | 277 |
| வாரியப்பொல | 278 |
| நிககவரெட்டிய | 279 |
| கொபெய்கனே | 280 |
| மாகோ | 281 |
| கல்கமுவ | 282 |
| அளவ்வ | 283 |

**அனுராதபுர மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மதவாச்சி | 291 |
| பதவி பராகிரமபுர | 292 |
| கெக்கிராவ | 293 |
| கல்னாவ | 294 |
| அனுராதபுரம் | 295 |
| கலென்பிந்துனுவெவ | 296 |
| கஹடகஸ்திகிலிய | 297 |
| நொச்சியாகம | 298 |
| தம்புத்தேகம | 299 |
| ஹெப்பட்டிகொல்லாவ | 300 |
| ரம்பாவ | 301 |
| மிஹிந்தலய | 302 |
| ஹொறவுபதான | 303 |
| பதவிய | 304 |

**பொலனறுவை மாவட்டம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொலன்னறுவை | 306 |
| ஹிங்குரக்கொட | 307 |
| மன்னம்பிட்டிய | 308 |
| பகமூன | 309 |
| மெதிரிகிரிய | 310 |
| கிரிதலே | 311 |

**பதுளை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பண்டாரவளை | 316 |
| ஹல்தும்முல்ல | 317 |
| வெலிமட | 318 |
| பதுளை | 319 |
| பசறை | 320 |
| மஹியங்கனை | 321 |
| கிராந்துருகோட்டை | 322 |
| ஹாலிஎல | 323 |
| அபகஸ்தோவ | 324 |

**மொனறாகலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ப்பிலை | 331 |
| மொனறாகலை | 332 |
| வெல்லவாய | 333 |
| படல்கும்புற | 334 |
| புத்தள | 335 |

**கேகாலை மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 341 |
| தெரணியகலை | 342 |
| தெஹியோவிட்ட | 343 |
| றம்புக்கண | 344 |
| மாவனெல்ல | 345 |
| வறக்காபொல | 346 |
| ஹெம்மாத்தகம | 347 |
| அரநாயக்க | 348 |
| ருவன்வெல்ல | 349 |
| எட்டியாந்தோட்டை | 350 |

**இரத்தினபுரி மாவட்டம**

| நகரம் | நகர எண் |
|---|---|
| எஹலியகொட | 356 |
| இரத்தினபுரி | 357 |
| பெல்மடுல்ல | 358 |
| கொடகவெல | 359 |
| பலாங்கொட | 360 |
| கலவான | 361 |
| நிவித்திகல | 362 |
| எம்பிலிபிட்டிய | 363 |